நாள்: 03.09.2024
OS 101/2018
பெயர் அபினவ் அண்ணாமலை
வா.சா.1

__குறுக்கு விசாரணை__

இந்த வழக்கில் என் பாட்டி என்ன வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரங்களை முழுமையாக கேட்டு தெரிந்துகொண்டேன். ஆவணங்கள் என்ன தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விபரத்தை கேட்டுத் தெரிந்துகொண்டேன். சரவணவேல் உடன் பிறந்த மூத்த சகோதரர் எனது தந்தை என்றால் சரிதான். எனது தந்தைக்கு நானும் எனது தாயார் பார்வதியும் வாரிசு ஆவோம். எனது தந்தையான துரைவெள்ளியப்பனின் வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் தாயாரை இந்த வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்பதால் இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. என் பாட்டியின் வாரிசாக என் தாயார் வரமாட்டார் என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு என் தகப்பனார் வாரிசு என்றும், என் தகப்பனாருக்கு என் தாயார் வாரிசு என்பதால் அவரை கட்சி சேர்க்கவேண்டும் என்றால் சரியல்ல. என் தாத்தா அண்ணமாலைத்தேவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து உள்ளது. பூர்வீக சொத்துகளில் சரவணனுக்கு பாத்தியப்பட்ட விகிதாச்சார பாகத்தை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. சொத்துக்கள் அனைத்தும் அவரிடம் தான் உள்ளது. வா.சா.ஆ 7 கிரைய ஆவணத்தில் சஞ்சீவி ராணி அவர் எழுதிக் கொடுத்த அனைத்து கிரைய ஆவணங்களிலும் தான் ஒரே வாரிசு என வாரிசு சான்றிதழ் பெற்று அதன் அடிப்படையில் கிரையம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். ஆனால் நாங்கள் 2017 ஆம் வருடம் ஆட்சேபனை தெரிவித்துள்ளோம். என் பாட்டி ஆட்சேபனை தெரிவித்துள்ளார். அதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நாங்கள் கொடுத்த ஆட்சேபனைக்கு வருவாய் துறையில் இருந்து ரசீது எதுவும் கொடுத்தார்களா என்றால் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். என் பாட்டி எந்த ஆட்சேபனையும் செய்யவில்லை என்றும் மனு கொடுத்திருந்தால் ரசீது கொடுத்திருப்பார்கள் என்றால் சரியல்ல. சரவணவேல் 2009 ல் இறந்த பிறகு அவருடைய பணப் பலன்களை 1ம் பிரதிவாதி சஞ்சீவிராணி தான் பெற்றுக்கொண்டார் என்றால் சரிதான். வாரிசு சான்றிதழை ரத்து செய்யவேண்டும் என நான் இவ்வழக்கில் பரிகாரம் எதுவும் கோரவில்லை. என் பாட்டி இறக்கும் போது சுமார் 70 வயது இருக்கும். வழக்கு தாக்கல் செய்யும் போது என் பாட்டிக்கு வயது 66 இருக்கும். என் தாத்தாவுக்கு 85 வயது இருக்கும். என் தாத்தா பாட்டிக்குரிய வாரிசு சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. என் பாட்டியும், தாத்தாவும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும் பின்பும் வயது முதிர்வின் காரணமாக வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். என் பாட்டியும், தாத்தாவும் வயது முதிர்வின் காரணமாக எங்கும் சென்று ஆட்சேபனை கொடுத்தது கிடையாது என்றும், இந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றும், என் தாயார் தூண்டுதலின் பேரில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு உண்மையில் வழகது தாக்கல் செய்ய வேண்டும் என எண்ணம் இருந்திருந்தால் சரவணவேல் பணப் பலன்களை அடைவதற்கு முயற்சி எடுத்திருப்பார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி வாரிசு சான்றிதழ் அடிப்படையில் கிரையம் கொடுத்துள்ளதால் மிகவும் காலதாமதாக தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு காலவாதி சட்டப்படி நிலைக்கதக்கதல்ல என்றால்

சரியல்ல. என் தகப்பானர் பெயரிலும் தனிப்பட்ட முறையில் சொத்து உள்ளது. எனது குடும்பத்தில் மூத்தவர் சங்கர் என்பவர் இருக்கிறார். எனது குடும்பத்தில் விபரங்கள் அனைத்தும் எனது சித்தப்பாவுக்கு நன்கு தெரியும். என் சித்தப்பா நீதிமன்றத்தில் வந்து சாட்சியம் அளிக்ககூடிய உடல் மற்றும் மனநிலையில் உள்ளார் என்றால் சரிதான். நான் கல்லூரியில் படிக்கம் போது நானும் 1ம் பிரதிவாதியும் ஒன்றாக தான் இருந்தோம். நான் படிக்கும் போது கல்விக் கட்டணங்களை என் சித்தி தான் அனுப்பினார் என்றால் சரியல்ல. நான் திறமையின் அடிப்படையில் அரசு மருத்துவக்கல்லூரியில் தான் எனது மருத்துவப் படிப்பை முடித்தேன். பொதுச்சொத்துக்களை என் சித்தப்பா அனைவரும் பார்த்து வந்ததால் அதில் இருந்து வந்த வருமானத்தில் வந்த பங்கை எனக்கு கொடுத்தார்கள். எனது தந்தையும் தாயும் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களாக இருந்தார்கள் என்றால் சரிதான். என் சித்தப்பா சரவணவேலும் உத்தமபாளையம் நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வந்தார் என்றால் சரிதான். எனது பெற்றோர்கள் மற்றும் என் சித்தப்பா அனைவரும் வருமான வரி செலுத்தும் நபர் என்றால் என் அப்பா செலுத்தி வந்தார். என் சித்தப்பா சரவணவேல் அவரது பெயரில் சொத்தை கிரையம் வாங்குவதற்கு தேவையான பணம் எப்படி கிடைத்தது என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அவர் வழக்கறிஞராக இருந்தார். என் சித்தப்பாவுக்கு தனிப்பட்ட முறையில் எந்த வருமானமும் கிடையாது என்றும், அவர் மதுபழக்கத்திற்கு அடிமையாகி இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் சித்தி ஆசிரியர் பணியில் உள்ளார் என்றால் சரிதான். என் சித்தி ஆசிரியர் பணியில் சேர்ந்த போது ரூ40000 ஊதியம் பெற்று வந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் சித்தி அரசு ஊழியர் என்பதால் அவருடைய தனிப்பட்ட வருமானத்தைக் கொண்டு என் சித்தப்பா பெயரில் சொத்துக்கள் கிரையம் வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு பிரச்சனையை ஊரில் உள்ள பெரியோர்களை வைத்து பேசினார்கள் என்றால் கிருஷ்ணமுரளி மற்றும் அவருடைய உறவினர்கள் மற்றும் வழக்கறிஞர் திரு.பாலமுருகன் ஆகியோர்கள் அனைவரும் வந்து குடும்ப பிரச்சனையை பேசினார்கள். மேற்படி பேச்சுவார்த்தை இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்னர் நடைபெற்றது. பேச்சுவார்த்தையின் பொழுது என் சித்தப்பா சரவணவேல் கடன்களை அடைத்துவிட்டு சொத்துக்களை நாங்கள் எடுத்துக்கொள்ளவேண்டுமென பேசப்பட்டது என்றால் நான் பேச்சுவார்த்தையில் அவ்வாறு சொல்லவில்லை. கிருஷ்ணமுரளி என்பவரை விசாரித்தால் கடன்களை பற்றிய விபரம் தெரியவரும் என்றால் சரிதான். குடும்பத்தில் நடந்த பேச்சுவார்த்தை பற்றி எனக்கு தெரியாத நிலையில் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் உண்மையில் பாகம் கோரியிருந்தால் சரவணவேலின் உடைய அனைத்து சொத்துக்களையும் இந்த வழக்கில் சேர்த்திருப்பேன் என்றும், சொத்துக்களை சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு பகுதி பாகபிரிவு கோட்பாடு என்ற சட்ட விதிப்படி தடைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் சித்தப்பா சரவணவேல் ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா மற்றும் பல வங்கிகளில் கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியுமா என்றால் ஸ்டேட் பேங்கில் வாங்கிய விபரம் எனக்கு தெரியும். மற்ற வங்கிகளில் கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியாது. என் சித்தப்பா மற்ற வங்கிகளில் கடன் வாங்கிய விபரம் எனக்கு தெரியும் என்றும் ஆனால் அதை தெரிந்து கொண்டே மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சொத்தில் பங்கு கேட்பது போல் கடன்களிலும் நாங்கள் விகிதாச்சார பாகத்தை எடுத்துக்கொள்வதற்காக கடன் விபரத்தையும் வழக்கில் சொல்லவேண்டும் என்றால் சரியல்ல. சரவணவேலுக்கு உரிய கடனை அடைப்பதற்கு லோக்

ஆதலாத்தில் பேசி முடித்து சொத்தை விற்பனை செய்து தான் கடனை அடைத்தார் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள கூட்டுப்பட்டாவில் கண்ட பல நபர்களை இந்த வழககில் சேர்க்காததால் அவசிய தரப்பினரை சேர்க்காத காரணத்தினால் குறைபாடு உடையது என்றால் சரியல்ல. என் சித்தாப்பாவின் கடனை செலுத்தியதற்கான அடமான ரசீதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அந்த ஆவணம் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல. பிராது 14 வது இலக்க சொத்து என் சித்தி 1ம் பிரதிவாதிக்கு அவரது பாட்டி வழி சொத்து என்றால் சரிதான். என் சித்தப்பா பெயரில் இருந்ததால் நான் தவறுதலாக சேர்த்துவிட்டேன். 14 வது இலக்க பாகப்பிரிவினைக்கு உட்பட்ட சொத்து என்றால் சரியல்ல. என் பாட்டிக்கு சொத்துக்களில் உரிமை இல்லை என வாரிசு சான்றிதழ் வழங்கியுள்ள நிலையில் இந்த சொத்தில் எனக்கு பாகம் கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் எழுந்துள்ள வழக்குமூலம் பொய்யானது என்றால் சரியல்ல. வாதியின் இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல.